EDP CELL
24 DEC 2014
CORPORATION OF CHENNAI

# சென்னை மாநகராட்சி
# மன்றக்கூட்டம்

## 29.12.2014 திங்கட்கிழமை
## அன்று காலை 10.30 மணிக்கு
## நடைபெறவுள்ள
## சாதாரண மன்றக்கூட்டத்தின்
## கூடுதல் பொருள் நிரல்

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ9/1931/2014

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.11.2014 நாளிட்ட குறிப்பு

பொருள் எண்.04

நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–15, வார்டு–195, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய ஒக்கியம் துரைப்பாக்கம் அடுக்குமாடி குடியிருப்பு திட்டப்பகுதி – சிமெண்ட் சாலைகளை சென்னை மாநகராட்சியின் தொடர் பராமரிப்புக்காக பெற்றுக் கொள்ள அனுமதி

மண்டலம்–15, வார்டு–195, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய ஒக்கியம் துரைப்பாக்கம் அவசர சுனாமி மறு குடியமர்வு திட்டத்தின் கீழ் 2048 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதாகவும், இத்திட்டப்பகுதியில் அமைந்துள்ள சிமெண்ட் சாலைகளை சென்னை மாநகராட்சி வசம் தொடர் பராமரிப்பிற்கு ஒப்படைக்கும் பொருட்டு நீளம், அகலங்களுடன் கூடிய வரைபடம் மற்றும் தான பத்திரத்தை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய ஈ.டி.ஆர்.பி. தெற்கு கோட்ட நிர்வாகப்பொறியாளரின் கடித ந.க.எண்.45/ETRPS (Dn)/2014, நாள்.11.06.2014 (ம) 25.08.2014ன்படி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அனுப்பிவைத்துள்ளது.

மேற்படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவுள்ள சிமெண்ட் சாலைகளை ஆய்வு செய்து சரியான விவரங்களுடன் வார்டு குழு பரிந்துரை பெற்று அனுப்புமாறு 15–வது மண்டல அலுவலரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் மேற்கண்ட சிமெண்ட் சாலைகளை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்வதற்கு 15–வது மண்டலம் வார்டுக் குழு தீர்மானம் எண்.283, நாள்:18.8.2014ன்படி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே, மண்டலம்–15, வார்டு–195, தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய ஒக்கியம் துரைப்பாக்கம் அடுக்குமாடி குடியிருப்பு திட்டப்பகுதி புல எண்–403/5 மற்றும் 403/6ல் அடங்கியுள்ள 17905 சதுர மீட்டர் பரப்பளவுள்ள 11 சிமெண்ட் சாலைகளை சென்னை மாநகராட்சி பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ள நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"22.12.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் கூட்டத்தின் தீர்மான எண்.472/14 நாள்.22.12.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".